**OPEN ACCESS**

Manuscript ID:
TAM-070120225097

Volume: 7

Issue: 1

Month: July

Year: 2022

P-ISSN: 2454-3993

E-ISSN: 2582-2810

Received: 15.04.2022

Accepted: 20.06.2022

Published: 01.07.2022

Citation:
Pogaraj, M. "The Poverty Level of Sangam Music Residents." *Shanlax International Journal of Tamil Research*, vol. 7, no. 1, 2022, pp. 70–75.

DOI:
https://doi.org/10.34293/tamil.v7i15097.

*Corresponding Author:
mpogaraj2014@gmail.com

This work is licensed under a Creative Commons Attribution-ShareAlike 4.0 International License

# The Poverty Level of Sangam Music Residents

**M. Pogaraj**
*Ph.D., Scholar, Department of Tamil*
*Government Arts College, Udumalpet, Tamil Nadu, India*
*https://orcid.org/0000-0001-7597-5898*

**Abstract**
The social structure of the Sangam period is seen to include a living environment with economic fluctuations. The lives of music artists such as Panar, Porunar, Viraliyar, Kiniyar, Koudhar etc., who are under this unbalanced economic environment, reveal the state of poverty surrounded by hunger and starvation. This study will examine the poverty level of these Tolgudi community, which was interwoven with various communities.

**Key Words:** Musicians, Pan society, Porunargal, Poverty Level.

**References**

1. Agananoor (Source and Text), Third Edition 2007. Chennai, New Century Book House.
2. Elampuranar (Text), *Tolkappiyam* (External), Fifteenth Edition 2018. Chennai Sarada Pathipagam, Chennai.
3. Kurundogai (Source and Text), Third Edition 2007. Chennai, New Century Book House.
4. Sirupanatrupadai (Source and Text), Third Edition 2007. Chennai, New Century Book House.
5. Bhaktavatsala Bharati, *Literary Anthropology*, First Edition 2014. Chennai, Adayalam Pathipagam, Trichy.
6. Bhaktavatsala Bharathi, *Panar Ethnography,* First Edition 2015, Trichy, Identity Publishing House.
7. Pathiruppattu (Source and Text), Third Edition 2007, Chennai, New Century Book House.
8. Perumalsamy, V, 2013, *Sangha Ilakiya Katchigal* (in Marxian Light) Second Edition, Chennai, Bharati Puthagalayam.
9. Purananuru (Source and Text), Third Edition 2007, Chennai, New Century Book House.
10. Natrinai (Source and Text), Third Edition 2007, Chennai, New Century Book House.
11. Vaiyapuripillai, S, 2005. Sangha Literature (Song and Volume), First Edition. Chennai, Mullai Nilayam.

# சங்ககால இசைக் குடிகளின் வறுமை நிலை

*மா. போகராஜ்*
முனைவர் பட்ட ஆய்வாளர், தமிழ்த்துறை
அரசு கலைக் கல்லூரி, உடுமலைப்பேட்டை

***ஆய்வுச் சுருக்கம்***

*சங்ககாலச் சமூக அமைப்பானது பொருளாதார ஏற்ற இறக்கம் மிக்க வாழ்வியல் சூழலை உள்ளடக்கியதாகக் காணப்படுகின்றது. இந்த சமநிலையற்ற பொருளாதாரச் சுழலுக்கு உட்பட்ட இசைக்குடிகளான பாணர், பொருநர், விறலியர், கிணையர், கூத்தர் முதலிய இசைக் கலைஞர்களின் வாழ்க்கை, பசியும் பட்டினியும் சூழ்ந்த வறுமை நிலையினை வெளிப்படுத்துவதாக உள்ளது. பல்வேறு சமூகத்துடன் பின்னிப்பிணைந்திருந்த தொல்குடிச் சமூகமான இந்த இசைக் குடிகளின் வறுமை நிலை எவ்வாறெல்லாம் இருந்தது என்பதனை இவ் ஆய்வின் மூலம் ஆராயப்படவுள்ளது.*

***முக்கியச்சொற்கள்:*** *இசைக்குடிகள், இசைக்கலைஞர்கள், பாண் சமூகம், பொருநர்கள், வறுமை நிலை.*

## முன்னுரை

சங்ககாலச் சமூகமானது “குடி” என்னும் பெயர் கொண்ட பல்வேறு குடியமைப்புகளாக இருந்து வந்துள்ளது. இவ்வாறு இனக்குழுக்களாகச் சேர்ந்து வாழும் இக்குழுக்கள் தங்களை சூழலியல் சார்ந்த குடிகளாக வகைப்படுத்திக் கொண்டு வாழ்ந்து வந்துள்ளனர். இக்குடிச் சமூக அமைப்பில் தொல்குடிகளில் ஒன்றாகப் பாண்குடி திகழ்கிறது. இசையும், கூத்தும் அடையாளமாகக் கொண்டு அலைகுடிகளாக வாழ்ந்த இசைக்கலைஞர்களே பாண் சமூகத்தவராவர். நிலையான வாழிடம் இன்றி அலைகுடிகளாக வாழ்ந்த இந்த இசைச் சமூகம் பெரும்பாலான நேரங்களில் வறுமை நிலையிலேயே வாழ்ந்துள்ளதை சங்கப் பாடல்கள் வழி அறிய முடிகின்றது. சங்ககால இசைக்குடிகளின் வறுமை நிலையினை சங்கப்பாடல்களின் வழி நின்று அறிவதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

## பாண் சமூகத்தின் வறுமை நிலை

சங்ககாலச் சமூகத்தில் தொன்றுதொட்டு இசைக்கலையைப் போற்றி வாழ்ந்தவர்கள் பாண் சமூகத்தவர்களாவர். பாணர்கள் யாழ் முதலான பல்வேறு இசைக் கருவிகளை இசைத்துப் பாடியும் தங்கள் கலைத்திறனை வெளிப்படுத்தி அதன்மூலம் வள்ளல்களிடம் பரிசு பெற்று தங்கள் வாழ்க்கையை நடத்தி வந்தனர். வள்ளல்களைச் சந்தித்துப் பரிசுகள் பெறும் தருணத்தில் வளமையாகவும் ஏனைய நாட்களில் கடும் வறுமையைச் சந்திக்கும் நிலையிலும் பாணர்கள் வாழ்க்கை இருந்துள்ளது.

பாணனின் வீட்டு அடுப்படியில் அவன் வளர்ப்பு நாய் ஈன்ற கண்விழிக்காத வளைந்த நாய்க்குட்டி தாய்மடியில் வாய் வைத்துப் பால் குடிக்கிறது. தாய் நாய் தன்னிடம் பால் இல்லாததால் வலி பொருத்துக் கொள்ள முடியாமல் குரைக்கிறது. இத்தகைய ஏழ்மையான வீடு பாணன் வீடு. இதன் மூலம் நீண்ட நாட்களாக அடுப்பு பயன்பாட்டில் இல்லாததால் நாய் அடுப்பில் குட்டி ஈன்றுள்ளது என்னும் பாணனின் வறுமையை அறியமுடிகிறது. மேலும் பாணன் வீட்டின் மேல்கூரை கரையான்கள் அரித்து இடிந்து விழுவது போல் உள்ளது. சுவர்களில் மண் புழுதி போல் பரந்து அவற்றில் காளான்கள்

பூத்திருப்பதாகவும் இத்தகைய சூழலைக் கொண்டது பாணன் வீடு.

**"இந்நாள்**
**திறவாக் கண்ண சாய் செவிக் குருளை**
**கறவாப் பால்முலை கவர்தல் நோனாது**
**புனிற்று நாய் குரைக்கும் புல்லென் அட்டில்**
**காழ்சோர் முதுசுவர்க் கணச் சிதல் அரித்த**
**பூமி பூத்த புழல் காளாம்பி"**

**(சிறுபாண், 130 - 143)**

என்ற பாடலின் மூலம் பாணனின் வறுமையின் உச்சநிலையினை அறிய முடிகின்றது.

**பொருநரின் வறுமை நிலை**

சங்ககால இசைக் குடியில் பாணர்களுக்கு அடுத்தபடியாக வாழ்ந்தவர்கள் பொருநர்கள் ஆவர். பாணர்களைப் போலவே இசையை மையமாகக் கொண்டு பரிசில் பெற்று வாழ்ந்தவர்கள் பொருநர்கள். "இவர்கள் பிறவகை கலைஞர்களிடமிருந்து சற்று வேறுபட்டவர்கள். இவர்கள் அரசர்களோடும் தலைவர்களோடும் நெருக்கமான உறவு கொண்டிருந்தனர். போர்க்களங்களிலும் அரண்மனைகளிலும் செல்வாக்கு மிக்கவர்களாக பொருநர்கள் இருந்துள்ளனர். மேலும் மற்ற கலைஞர்களைவிட பொருநர்கள் குறைவாகவே வெளியிடங்களில் அலைந்து திரிந்தனர்" (பாணர் இனவரைவியல், ப.76). பொருநர்களில் ஏர்க்களம் பாடுவோர், போர்க்களம் பாடுவோர், பரணி பாடுவோர் எனும் மூன்று வகையினர் இருந்தனர். பொருநர்கள் தாங்கள் சார்ந்து இருக்கும் மன்னர்களைத் தவிர பிறரைப் புகழ்ந்து பாடாதவர்களாக இருந்துள்ளதை புறநானூற்றின் (புறம்,382) வழி அறிய முடிகிறது.

பொருநர்கள் மன்னர்களைச் சார்ந்தொழுகிய போதிலும் வறுமை வாழ்க்கையே கொண்டிருந்தனர் என்பதை பின்வரும் பாடல் புலப்படுத்துகிறது.

**"ஆடுபசி உழந்த நின் இரும்பேர் ஒக்கலோடு**
**நீடு பசி ஓராஅல் வேண்டின் நீடு இன்று**
**எழுமதி வாழி ஏழின் கிழவா"**

**(பொருநாறு, 61 - 63)**

என்ற பாடல் பொருநனின் பசித்துயரானது கொல்லுகின்ற பசித்துயரால் வருந்தும் தன்மையுடையது. மேலும் இத்தகைய பசியினாலும் வறுமையினாலும் நீண்ட நாள் வாடியிருக்கும் பொருநர் கூட்டத்தைப் பரிசில் பெற்ற பொருநன் ஏழிசை வல்லோனாகிய கரிகால் பெருவளத்தானை நாடி இன்றே செல்க என ஆற்றுப்படுத்துமாறு அமைந்துள்ளது. இதன்மூலம் வள்ளல்களைச் சந்தித்துப் பரிசில் பெரும் வரை பொருநர்களின் வாழ்வானது கொடிய பசித்துயரினைக் கொண்ட வறுமை நிலையில் வாடியிருப்பதை அறிய முடிகின்றது.

பட்டினியோடு மரத்தில் தலைவைத்துத் தூங்கிவிட்டு, அங்கு பூத்திருந்த மலர்களை நாரில் தொடுத்து தலையில் சூடிக் கொண்டு பரிசில் பெற வந்திருக்கும் பொருநன் தன் வறுமை நிலையினைப் பாடுவதை,

**"ஈடும் பேணும் இருந்து சிறயாக்கூடி**
**வேரோடு நனைந்து வெற்றிலை நுழைந்த**
**துண்ணல் சிறார"**

**(பொரு, 80 - 82)**

என்ற பாடல் வழி அறியலாம்.

**விறலியரின் வறுமை நிலை**

சங்ககாலப் பாண் மகளிரே விறலியர் ஆவர். பாணர்களுடன் இணைந்து இசைக்கவும், ஆடல் மேற்கொள்வதும் விறலியின் வாழ்க்கைச் சூழலாகும். விறலியர்கள் பாடினி, மதங்கி, ஆடல், மகடூஉ, பாண்மகள் எனப் பலவாறு அழைக்கப்பெற்றனர். இதனை "செல்லா மோதில் பாண்மகள்" என பதிற்றுப்பத்து - 60 கூறுகிறது.

வறுமையின் பிடியில் வாடிய விறலியர் பொருநர்களுடன் சேர்ந்து பரிசில் வேண்டிச் சென்ற காட்சியினை சங்கப் பாடல்கள் வெளிப்படுத்துகின்றன.

போரில் விழுப்புண்பட்ட தலைவனைப் பற்றித் தலைவி பாடுமிடத்து பாணர், விறலியர், ஆயை ஆகிய உங்களின் வாழ்க்கையானது வள்ளல்களாகிய தலைவன் இன்றி இனி என்னவாகுமோ என புலம்புகிறார். இதனை,

**“துடிய பாண பாடு உல் விறலி!**
**என் ஆகுவர்கொல்? அளியீர் நுமக்கும்**
**இவன் உறை வாழ்க்கையோ, அரிதே”**

**(புறம், 280)**

இவ்வாறாகப் பாடியும் ஆடியும் வாழும் விறலியர் முழவு, யாழ், தூம்பு, எல்லரி, ஆகுளி, பதலை முதலான பல இசைக் கருவிகளை இசைக்கும் திறம் பெற்றிருந்தனர். (புறம், 152) மேலும் ஆடல் கலையிலும் சிறந்தவளாக விறலியர் விளங்கினர்.

**கூத்தர் நிலை**

கூத்துக் கலையை நிகழ்த்திய கலைஞர்கள் கூத்தர்கள் ஆவர்.

**“கூத்தரும் பாணரும் பொருநரும் விறலியும்**
**ஆற்றிடைக் காட்சி உறழத் தோன்றி”**

**(தொல்.புறம் – 88)**

எனத் தொல்காப்பியர் கூறும் நான்கு வகை இசைக்கலைஞர்களில் கூத்தர் முதன்மையானவர் ஆவர். பரிசில் பெற்ற கலைஞர் வறுமையில் வாடும் கூத்தர், பாணர், பொருநர், விறலியரை ஆற்றுப்படுத்தும் செய்தியினை தொல்காப்பியம் எடுத்துரைக்கிறது.

வறுமை நிலையினைப் போக்கும் பொருட்டு கூத்தர்களும் மற்ற இசைக்கலைஞர்களைப் போலவே புரவலர்களை நாடிச் சென்றுள்ளனர். இதனை (நற். 213:3) (அகம். 301:21, 309:9) ஆகிய பாடல்கள் வழி அறியலாம்.

கூத்துக் கலையை உயிராகப் போற்றி வந்த இவர்கள் வறுமை நிலையை போக்கிக் கொள்ள தனது உயிரைப் பனையம் வைத்து ஒற்றைக் கயிற்றின் மீது நின்று கலைத் திறனைக் காட்டிய நிகழ்வினை,

**“கழைபாடு இரங்க, பல் இயம் கறங்க**
**ஆடுமகள் நடந்த கொடும்புரி நோன் கயிற்று**
**அதவத் தீம் கனி அன்ன செம்முகத்**
**துய்த் தலை மந்தி வன் பறழ் தூங்க**
**கழைக் கன் இரும் பொறை ஏறி”**

**(நற். 95)**

என்ற பாடல் விளிம்பு நிலையில் வாழும் கழைக்கூத்தாடிகளின் வாழ்வினை எடுத்துரைக்கின்றது. கூத்தர்களின் வாழ்வியல் எச்சமானது சங்க காலம் தொட்டு இன்று வரையிலும் காணப்படுகிறது. கழைக்கூத்தாடுபவர்களின் வாழ்க்கைச் சூழல் இன்றும் வறுமை நிலையே விளங்குவதாகக் காணமுடிகின்றது.

**கிணையரின் வறுமை நிலை**

கிணை என்னும் இசைப் பறையை இசைத்தவர்கள் கிணையர்கள் ஆவர். இவர்களைக் கிணையர், கிணைமகன், கிணைவன் என்று சங்க இலக்கியப் பாடல்கள் இயம்புகின்றன. “பறை இசைத்து போர் வீரர்களுக்கு ஊக்கமூட்டுவதும், வள்ளல்களைப் பாடித் துயில் எழுப்புவதும் கிணையர்களின் தொழில் ஆகும்” (இலக்கிய மானிடவியல், ப.85) கிணையர்கள் பெரும்பாலும் வறுமை நிலையிலேயே வாழ்ந்துள்ளதை சங்கச் செய்யுள்கள் மூலம் அறியமுடிகின்றது. பசியால் வாடியிருந்த கிணையன் புரவலரைத் தேடிச்சென்ற இடத்தில் பனைமரத்தின் பழத்தையும், பனங் குருத்தையும் பசிக்கு உண்டதாகவும் அங்கு வாழ்ந்த உழவர் குடிதோறும் சென்று கேட்டுப் பெற்று உணவு உண்டு வாழும் வாழ்க்கையை மேற்கொண்டேன் என்கிறான்.

***"பொதியில் ஒரு நிறை பள்ளிஆக***
***முழா அறைப் போந்தை அர வாய் மா மடல்***
***நாரும் போடும் கிணையோடு சுருக்கி,***
***ஏரின் வாழ்நர் குடிமுறை புகாஅ,***
***ஊழ் இரந்து உண்ணும் உயவல் வாழ்வை"***

***(புறம், 375)***

கிணையன் தன் வறுமை நிலையை எடுத்துரைப்பதாக இப்புறநானூற்றுப் பாடல் விளக்குகின்றது.

கருப்பனூர் கிழான் எனும் குறுநிலத் தலைவன் தன்னிடம் செல்வம் இல்லாத போதும் வறுமையான சூழலில் தன்னை தேடிவந்த கிணையர்களைப் பேணிப் பாதுகாத்து பசியாற்றி, பரிசுகள் பல கொடுத்து அனுப்பவேண்டுமென நினைத்தான். இதனை,

***"இருப்பறைக் கிணைமகன் சென்றவன், பெரும்பெயர்***
***சிறுகுடி கிழான் பண்ணன் பொருந்தி***
***இடுக்கண் கிரியல் போக உடைய***
***கொடுந்தோன் எந்தை கொடைமேந் தோன்றல்"***

***(புறம், 379)***

என்ற பாடல்வழி எடுத்துரைக்கின்றார்.

## துடியன் வறுமை நிலை

போர்க்களத்தில் துடி எனும் இசைக் கருவியை அடிப்பவர்கள் துடியர்கள் ஆவர். துடியிசைத்து வீரர்களுக்கு உணவூட்டுபவர்களாக துடியர்களை (புறம், 269, 285, 291) ஆகிய பாடல்கள் வழியாக அறியலாம்.

***"துடியன் பாணன் பறையன் கடம்பனென்று***
***இந்நான் கல்லது குடியும் இல்லை"***

***(புறம் 335: 7 - 8)***

என்ற புறப்பாடலின் மூலம் பண்டைய இசைக் குடியில் துடியர் சமூகம் சிறந்து விளங்கியதை அறிய முடிகிறது. இருப்பினும் இச்சமூகம் பொருளாதார நிலையில் மிகவும் பின்தங்கியதாகவும் புரவலர்களைச் சார்ந்திருக்கும் வறுமை நிலையினைக் கொண்டிருப்பதையும் சங்கப் பாடல்கள் வெளிப்படுத்துகின்றன.

***"துடிய பாண பாடுவல் விறலி***
***என் ஆகுவீர் கொல்"***

***(புற, 280 : 8 - 9)***

என்ற வரிகள் புரவலராகிய தலைவன் மாண்டுவிட்டால் துடியர்களாகிய உங்களின் வாழ்க்கை இனி என்னவாகுமோ என வினவும் படியாக உள்ளது. இதன் மூலம் துடியர்கள் வறுமையால் பிறரைச் சார்ந்தொழுகும் நிலையில் இருந்தது புலனாகிறது.

## முடிவுரை

சங்ககாலச் சமூக அமைப்பான பொருளாதார ரீதியில் ஏற்றத்தாழ்வு உடையதாக இருந்துள்ளது. இதற்கு சங்ககால இசைக்கலைஞர்களின் வாழ்க்கை நிலையே சான்றாகின்றது.

மன்னர்களைச் சார்ந்தே வாழ்ந்த கிணையர், பொருநர் போன்ற இசைக்குடிகள் மன்னர்களின் வீழ்ச்சிக்குப் பின்னர் தங்கள் வாழ்வாதாரத்திற்கு என்ன செய்வது என்று உணர முடியாமல் தவிக்கின்றனர் என்பதை இவ்வாய்வு எடுத்துரைக்கின்றது. புரவலர்கள் இல்லாத சூழலில் ஆயர் முதலிய பொதுமக்களிடம் இரந்துண்டு வாழ்க்கையை நடத்தும் சூழலில் இக்கலைஞர்கள் இருந்துள்ளனர் என்பது இவ்வாய்வின் மூலம் வெளிப்படுகின்றது. சங்ககாலம் தொட்டு இசைக் கலைஞர்களின் வாழ்வில் வறுமை என்பது இன்றுவரை நீடித் திருப்பது வரலாற்று எச்சமாகக் கருதலாம். இதற்கு இவ்வாய்வு வழி செய்கிறது. போதிய செல்வமும் அங்கீகாரமும் இல்லாமலேயே இசைக்குடிகளின் வாழ்க்கை வறுமை நிலைக்குத் தள்ளப்பட்டு பல இசைக் கலைகள் வழக்கொழிந்து போயின என்பதையும் இவ்வாய்வின் மூலம் அறியலாம்.

## துணைநூற்பட்டியல்

1. மூன்றாம் பதிப்பு. 2007. *அகநானூறு (மூலமும் உரையும்)*, சென்னை, நியூ செஞ்சுரி புக் ஹவுஸ்.

2. *இளம்பூரணார்(உரை).* 2018. தொல்காப்பியம் (புறம்), பதினைந்தாம் பதிப்பு. சென்னை, சாரதா பதிப்பகம்.
3. மூன்றாம் பதிப்பு 2007. *குறுந்தொகை (மூலமும் உரையும்),* சென்னை, நியூ செஞ்சுரி புக் ஹவுஸ்.
4. மூன்றாம் பதிப்பு 2007. *சிறுபாணாற்றுப்படை (மூலமும் உரையும்).* சென்னை, நியூ செஞ்சுரி புக் ஹவுஸ்.
5. முதல் பதிப்பு 2014. பக்தவத்சல பாரதி. *இலக்கிய மானிடவியல்,* திருச்சி, அடையாளம் பதிப்பகம்.
6. முதல் பதிப்பு 2015. பக்தவத்சல பாரதி, *பாணர் இன வரைவியல்,* திருச்சி. அடையாளம் பதிப்பகம்,
7. மூன்றாம் பதிப்பு 2007. *பதிற்றுப்பத்து (மூலமும் உரையும்),* சென்னை, நியூ செஞ்சுரி புக் ஹவுஸ்
8. இரண்டாம்பதிப்பு 2013, பெருமாள்சாமி, வெ. *சங்க இலக்கியக் காட்சிகள்.* சென்னை, (மார்க்சிய வெளிச்சத்தில்) பாரதி புத்தகாலயம்.
9. *புறநானூறு (மூலமும் உரையும்).* மூன்றாம் பதிப்பு 2007. சென்னை. நியூ செஞ்சுரி புக் ஹவுஸ்,
10. மூன்றாம் பதிப்பு 2007, *நற்றிணை (மூலமும் உரையும்),* சென்னை. நியூ செஞ்சுரி புக் ஹவுஸ்.
11. வையாபுரிப்பிள்ளை, எஸ், சங்க இலக்கியம் (பாட்டும் தொகையும்) முதல் பதிப்பு (2005) முல்லை நிலையம், சென்னை.